
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1100

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# 'மைனாரிட்டி' தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிபுல்லா

49

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

## சிறுபான்மையினர் வாழ்வில், 'டாம்கோ' புரட்சி!

**2010**-ஆம் ஆண்டு, சென்னையில் நடைபெற்ற பிரம்மாண்ட மாநாட்டில், இஸ்லாமிய சமூகத்துக்கு முத்தமிழறிஞர் கலைஞர் செய்த தொண்டினைப் பாராட்டி, அவருக்கு 'நல்லிணக்க நாயகர்' விருது வழங்கிய இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன், 'டாம்கோ போன்ற அமைப்புகள் இஸ்லாமிய இளைஞர்களின் பொருளாதாரத் தடையை உடைத்தெறிந்தன' என்று தனது உரையில் பாராட்டினார். டாம்கோ மூலம் சிறுபான்மையினருக்குக் குறைந்த வட்டியில் கடன் வழங்கப்படுவதை, 'பொருளாதாரப் புரட்சி' என்று பாராட்டியுள்ளார், கவிக்கோ அப்துல் ரகுமான். பல்வேறு இஸ்லாமிய அமைப்புகளும் 'டாம்கோ' உருவாக்கியதற்காகக் கலைஞரைப் பாராட்டியுள்ளன, தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளன.

### டாம்கோ செய்த புரட்சி என்ன?

சிறுபான்மையினரின் வாழ்வியல் மேம்பாட்டுக்காக முத்தமிழறிஞர் கலைஞர் அமைத்த மிக முக்கியமான அடித்தளம் 'தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (TAMCO - டாம்கோ)'. முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள், சீக்கியர்கள், புத்த மதத்தினர், பார்சிகள் மற்றும் சமணர்கள் உட்பட தமிழ்நாட்டில் வாழும் அனைத்து மதச் சிறுபான்மையினரின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காக, அவர்களுக்கு மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கி, சுயதொழிலை ஊக்குவிக்க, 1999 ஆகஸ்ட் 31 அன்று கலைஞரால் தொடங்கப்பட்டது டாம்கோ.

சிறுதொழில் அல்லது வியாபாரம் செய்ய தனிநபர் கடன், சிறுபான்மையினப் பெண்கள் அடங்கிய குழுக்களுக்கு, சுய உதவிக்குழுக்களுக்கான கடன், இந்தியாவில் அல்லது வெளிநாடுகளில் உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்குக் குறைந்த வட்டியில் கல்விக்கடன், பாரம்பரியக் கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்யும் கைவினைஞர்களுக்கான கடன் திட்டம், வாழ்வாதாரத்தை மேம்படுத்த வாகனங்கள் மற்றும் கால்நடைகள் வாங்கக் கடன் திட்டம், ஆட்டோ கடன் உட்பட முக்கியமான கடன் வழங்கும் திட்டங்கள் இதில் செயல்படுத்தப்படுகின்றன.

அதனால்தான் கலைஞர் அவர்கள் இக்கழகத்தைத் தொடங்கியபோது, 'இது வெறும் ஒரு நிதி வழங்கும் நிறுவனம் மட்டுமல்ல, சிறுபான்மையினரின் பொருளாதாரப் பாதுகாப்பு அரண்' என்று குறிப்பிட்டார். 'சிறுபான்மையினரின் வாழ்வில் ஒளியேற்றவும், அவர்கள் எவரிடமும் கையேந்தாமல் சொந்தக் காலில் நிற்கவும் இந்த அமைப்பு உதவும்' என்றும் கலைஞர் அப்போதே உறுதியளித்தார். தொடக்க மூலதனமாக ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடும் செய்தார். மாவட்டந்தோறும் உள்ள கூட்டுறவு வங்கிகள்மூலம் கடன் விநியோகம் சீரமைக்கப்பட்டது.

இக்கழகம் தொடங்கப்பட்ட முதல் இரண்டு ஆண்டுகளில் (1999-2001) மட்டுமே சுமார் 5,640 சிறுபான்மையினப் பயனாளிகள் நேரடி பலன் பெற்றுள்ளனர். இந்தத் தொடக்கக் காலத்தில் சுமார் ரூ.10.15 கோடி மதிப்பிலான கடனுதவிகள் சிறுதொழில், விவசாயம் மற்றும் சுயதொழில் தொடங்குவதற்காக வழங்கப்பட்டன. ஆனால், அடுத்து அமைந்த அ.தி.மு.க. அரசு, டாம்கோ செயல்படும் வேகத்தைக் குறைத்தது. நிதி விடுவிக்கப்படும் வேகம், பயனாளிகளின் எண்ணிக்கை அனைத்துமே மந்தமாகின. ஆனால், 2004 நாடாளுமன்றத் தேர்தல் தந்த பாடத்தின் காரணமாக, அம்மையார் ஜெயலலிதா கொஞ்சம் கவனம் செலுத்தினார். அப்படியும் 2001-2006 ஆண்டு காலகட்டத்தில் மொத்தமாக 14,000 பேர் மட்டுமே பலனடைந்தனர்.



### டாம்கோவின் பொற்காலம்

மீண்டும் 2006-இல் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில், தி.மு.க. அரசு அமைந்தபோது, டாம்கோவுக்கு பொற்காலமாக மாறியது. இக்காலகட்டத்தில் சிறுபான்மையினருக்கான நிதி ஒதுக்கீடுகள் பல மடங்கு அதிகரிக்கப்பட்டன. சுமார் 65,000-க்கும் மேற்பட்ட சிறுபான்மையின மக்கள் இக்காலகட்டத்தில் கடனுதவி பெற்றனர். ஏறத்தாழ ரூ.100 கோடிக்கும் அதிகமான கடன்கள் வழங்கப்பட்டன. இது 2001-2006 காலகட்டத்தைவிட மூன்று மடங்கு அதிகமான வளர்ச்சியாகும். பயனாளிகளின் சுமையைக் குறைக்க வட்டி விகிதங்கள் சீரமைக்கப்பட்டன. குறிப்பாக, பெண்களுக்கு மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் கடன்கள் வழங்கப்பட்டன. மருத்துவம், பொறியியல் போன்ற உயர்கல்வி பயிலும் சிறுபான்மையின மாணவர்களுக்கு டாம்கோ மூலம் கல்விக் கடன் வழங்கும் திட்டம் இக்காலகட்டத்தில் தீவிரப்படுத்தப் பட்டது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில், டாம்கோ கடன்களை ஆய்வு செய்யவும், விரைவாக வழங்கவும் தனிக்குழுக்கள் முடுக்கிவிடப்பட்டன. சிறுபான்மையினப் பெண்கள் அடங்கிய சுய உதவிக்குழுக்களுக்கு 'சுழல் நிதி' மற்றும் தொழில் தொடங்குவதற்கான கடன் வழங்கும் முறைக்கு, இந்த ஆட்சிக்காலத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. 2006-2011 தி.மு.க. ஆட்சியில், ஒவ்வொரு பட்ஜெட்டிலும் டாம்கோவுக்கான மாநில அரசின் பங்கு மூலதனம் உயர்த்தப்பட்டது. இதன் விளைவாக, ஒன்றிய அரசின் தேசிய சிறுபான்மையினர் மேம்பாடு மற்றும் நிதிக் கழகத்திடம் (NMDFC) இருந்து கூடுதல் நிதியைப் பெற்றுத் தமிழ்நாட்டிற்குப் பயன்படுத்திக்கொள்ள முடிந்தது. சிறுபான்மையினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் ஒரு சமூகப் பாதுகாப்புத் திட்டமாக இதனை மாற்றினார் கலைஞர்.

> "கலைஞர் சிந்தித்து செயல்படுத்திய டாம்கோ, கவிக்கோ கூறியதைப்போல நிச்சயம் ஒரு மாபெரும் பொருளாதாரப் புரட்சிதான்!"

### நவீனமாக்கிய திராவிட மாடல் அரசு

மீண்டும் 2011-ஆம் ஆண்டு முதல் 2021-ஆம் ஆண்டு வரையிலான 11 ஆண்டுகளில் சேர்த்து மொத்தமாகவே 1.5 லட்சம் பேர் டாம்கோ மூலம் பலன் பெற்றனர். பெரிய முன்னேற்றங்கள் எதுவுமின்றி இத்திட்டம் தொடர்ந்தது, அவ்வளவே. 2021-இல் திராவிட மாடல் அரசு அமைந்த பிறகுதான் டாம்கோ மீண்டும் புத்துயிர் பெற்று நவீனமாக்கப்பட்டது. முன்பெல்லாம் மாவட்ட அலுவலகங்களுக்கு நேரில் செல்ல வேண்டிய நிலை இருந்தது. தற்போது TAMCO.TN.GOV.IN என்ற தளம் மூலம் விண்ணப்பிக்கும் முறை கொண்டு வரப்பட்டுள்ளது. இடைத்தரகர்கள் இன்றி, கடன் தொகை நேரடியாகப் பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்குச் சென்றடைவதை திராவிட மாடல் அரசு உறுதி செய்துள்ளது. குறிப்பாக, முஸ்லிம் மற்றும் கிறிஸ்துவப் பெண்கள் அதிகமுள்ள பகுதிகளில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, ஒரே நாளில் நூற்றுக்கணக்கானோருக்கு கடன் ஆணைகள் வழங்கப்படுகின்றன.

முதல் 4 ஆண்டுகளில் மட்டும் 45,000-க்கும் மேற்பட்டோர் டாம்கோ மூலம் பயன்பெற்றுள்ளனர். வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு சுமார் 350 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் (2024-2025) மட்டும் 75 கோடி ரூபாய் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் பயிலும் மாணவர்களுக்கான கல்விக்கடன் தொகையை உயர்த்தி, முதல்வர் உத்தரவிட்டுள்ளார். வெளிநாட்டுக் கல்விக்கு ரூ.30 லட்சம் வரை கடன் வழங்கப்படுகிறது. மாணவர்களுக்கான வட்டி விகிதம் பெண்களுக்கு வெறும் 3 சதவிகிதம், ஆண்களுக்கு 5 சதவிகிதம் மட்டுமே.

பிப்ரவரி 17, 2024 அன்று சென்னையில் நடைபெற்ற சிறுபான்மையினர் நல ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், "நாம் எப்போதோ சந்திப்பவர்கள் அல்ல, அவ்வப்போது சந்திப்பவர்கள். நீங்கள் கோரிக்கை வைப்பதற்கு முன்பே உங்கள் தேவைகளைச் செய்து தரும் அரசு இது. திராவிட மாடல் என்பது எவரையும் பிரிக்காது; எல்லார்க்கும் எல்லாம் என்பதே எமது கொள்கை" என்றுகூறி டாம்கோ மூலம் 9,217 பேருக்கு 62 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டதைச் சுட்டிக்காட்டினார். ஆம், அவர்கள் கோரிக்கை வைப்பதற்கு முன்பே கலைஞர் சிந்தித்து செயல்படுத்திய டாம்கோ, கவிக்கோ கூறியதைப்போல நிச்சயம், ஒரு மாபெரும் பொருளாதாரப் புரட்சிதான்!

...நீளும்

## முடிவெடுக்க முடியாமல் திணறிய மோடி?

முன்னாள் ராணுவத் தளபதி நரவானே எழுதிய புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 5 வரிகளை, நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியை வாசித்துக்காட்ட விடாமல் தடுத்திருக்கிறார்கள் ஒன்றிய அமைச்சர்களான அமித் ஷாவும், ராஜ்நாத் சிங்கும். அப்படி அந்தப் புத்தகத்தில் என்ன உள்ளது என்பதுதான், நாடு முழுக்க இப்போது பேசுபொருளாக உள்ளது.

31 ஆகஸ்ட் 2020 அன்று இரவு 8.10 மணிக்கு சீன டாங்குகள் கிழக்கு லடாக்கில் உள்ள ரெசின் லா நோக்கி வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தன. நிலைமையின் தீவிரத்தை உணர்ந்த இராணுவத் தளபதி ஜெனரல் மனோஜ் முகுந்த் நரவானே, உடனடியாக பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், பாதுகாப்புத்துறை தலைமை தளபதி ஜெனரல் பிபின் ராவத் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் ஆகியோருக்கு தகவல் கொடுத்துள்ளார். பாதுகாப்புத்துறை அமைச்சர் மூலமாக பிரதமர் மோடிக்கும் தகவல் அளிக்கப்பட்டுள்ளது.


ஆனால், சீனப்படை இந்திய எல்லையை ஒட்டி 500 மீட்டர் தொலைவுக்குள் வரும்வரை, பிரதமர் மோடியிடம் இருந்தோ, மற்ற அமைச்சர்களிடத்தில் இருந்தோ எந்தப் பதிலும் வரவில்லை என '∴போர் ஸ்டார்ஸ் ஆ∴ப் டெஸ்டினி' என்ற தனது நூலில் பதிவு செய்துள்ளார் நரவானே. "ஒருபுறம் – எந்த வழியிலும் சுடத் தயாராக இருந்த கள கமாண்டர்கள், மறுபுறம் – இன்னும் தெளிவான உத்தரவை வழங்காத ஓர் அரசுக் குழு. இந்த இரண்டுக்கும் இடையில் நான் சிக்கிக்கொண்டிருந்தேன். இரவு 10.30 மணிக்கு ராஜ்நாத் சிங் மீண்டும் அழைத்தார். அவர் பிரதமர் நரேந்திர மோடியுடன் பேசியிருந்தார். 'உங்களுக்கு சரியாகத் தோன்றுவதைச் செய்யுங்கள்' என மோடி சொன்னதாக ராஜ்நாத் சிங் கூறினார்" என அந்த நூலில் பதிவு செய்திருக்கிறார் நரவானே.

முடிவெடுக்க திறனில்லாமல், எவ்வளவு கோழைத்தனமான ஒரு பதிலை மோடி கூறியிருக்கிறார் என்பது அம்பலமாகிவிடும் என பயந்து, ராகுல் காந்தியை அவ்வரிகளை வாசிக்க விடாமல் தடுத்து, பா.ஜ.க.வினர் கூச்சல் குழப்பங்களை எழுப்பி, நாள் முழுவதும் அவையை ஒத்திவைத்துவிட்டு, 56 அங்குல மார்பு கொண்ட மனிதரின் மாண்பைக் காத்திருக்கிறார்கள். நூல் வெளியீட்டையும் தடுத்து வைத்திருக்கிறார்கள். இந்த வீரம் சீனப்படையிடம் இல்லாமல் போனது ஏனோ!

## ∴ப்ளாஷ்பேக்



### பிறந்த நாளில் தலைவரிடம் பெற்ற வாழ்த்து!



ஆ.இரா.அருண்

2006-ஆம் ஆண்டு, எனது பிறந்தநாளை முன்னிட்டு, கழகத் தலைவர் ஐந்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களிடம் வாழ்த்து பெற சென்றேன். அப்போது, மாணவர் அணியில் செயல்பட்டு வந்தேன். உடன் இன்றைய கழகத் துணைப் பொதுச் செயலாளர் – சென்னை மண்டலத் தேர்தல் பொறுப்பாளர் – நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணன் ஆ.ராசா அவர்கள் இருக்கிறார். தலைவரைப் பார்க்கும் ஒவ்வொரு முறையும் என் வாழ்வில் உன்னதமான நேரங்கள், என்றால் மிகையில்லை.

**– ஆ.இரா.அருண், மாவட்டப் பிரதிநிதி,**
**அம்பத்தூர் வடக்குப் பகுதி, சென்னை கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### சித்திரை மாதத்தில் தமிழ்நாடு!

1967-ஆம் ஆண்டு, கழகத்தின் ஆட்சி அமைந்த ஒரு மாதத்தில், சென்னை மாநிலத்திற்கு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டினார் பேரறிஞர் அண்ணா. ஏப்ரல் 14-ஆம் தேதி சித்திரை முதல் நாளில், தமிழ்நாடு எனப் பெயரிடப்பட்டது. 'தமிழக அரசு தலைமைச் செயலகம்' என்ற ஒளி பெயர்ப் பலகையை பேரறிஞர் அண்ணா அவர்கள் திறந்து வைத்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131